24.8.2026 O.S 276/2025 வா.சா.1 வினோத்குமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வருடம் தேர் திருவிழாவிற்கு 2ம் பிரதிவாதி சுகன்யா என் வீட்டிற்கு வந்திருந்தார் என்றால் சரிதான். என்னுடன் 2ம் பிரதிவாதி பேசி பழகி வந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் கதிரேசன் நான் படிக்கும் காலத்திலும், எனக்கு தொழில் வைக்கவும், 2ம் பிரதிவாதி திருமணத்திற்கோ எனக்கு எந்தவித உதவியும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தான் உழைத்து வருகிறேன். என் அப்பா பூர்வீக சொத்தை விற்று பணம் வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த பணத்தை வட்டிக்கு கொடுத்து என் அப்பா இறந்துவிட்டதால் அந்த பணம் திரும்ப கிடைக்கவில்லை. என் அப்பா வட்டிக்கு கொடுத்த காலத்தில் என் அப்பா என்னையும், என் சகோதரி, என் அம்மாவை வீட்டில் சேர்க்கவில்லை என்றால் அவ்வவ்போது சேர்ப்பார். என் அப்பா வட்டிக்கு கொடுக்கும் பணத்தை வாங்கி கையில் சேர்த்து வைத்து கொள்வார் என்றால் சரிதான். வட்டிக்கு பணம் கொடுத்து பத்திரம் பதிவு செய்த எந்த சொத்தையும் என் அப்பா வாங்கியது கிடையாது என்றால் சரிதான். என் அப்பா கீழக் கடையம் கிராமத்தை சேர்ந்த துரைராஜ் மனைவி ராதா வகையறாவிற்கு பணம் கொடுத்தாக என் அப்பா வழக்கு தாக்கல் செய்து, என் அப்பா இறந்தபிறகு மேற்படி வழக்கில் நானும், மேற்படி ராதாவும் சமாதானம் பேசி தொகையை பெற்றுக்கொண்டு வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு அ .வ.எண்.84/2013 என்றால் சரிதான். அந்தவ ழக்கின் தீர்ப்புரை நகல் பி.வா.சா.ஆ 1. என் அப்பா வள்ளி என்பவருக்கு பணம் கொடுத்து அதுவும் பேசி முடிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா வேலம்மாள் என்பவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து பேசி

முடிக்கப்பட்டது என்றால் சரிதான். அதுவும் கிரைய ஒப்பந்த வழக்கு என்றால் சரிதான். என் அப்பா ராஜேஸ்வரி என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கும் முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா வட்டிக்கு கொடுக்கும் போது அதற்கான ஆவணத்தை என் வீட்டிற்கு எதிரே உள்ள என் பெரியப்பாவிடம் தான் எழுதுவார் என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் அவர் கடன் கொடுத்த பணத்தை ஓரளவு வாங்கி விடுவார் என்றால் சரிதான். என் அப்பா பணம் கொடுத்த நபர்களிடம் பணம் கேட்டு அவர்கள் கொடுக்காமல் இருந்தால் அவர்கள் வீட்டில் போய் உட்கார்ந்து விடுவார் என்றால் சரிதான். அவ்வாறு கொடுக்காதவர்கள் மீது என் பெரியப்பா மகன் வழக்கறிஞர் என்பதால் அவர் மூலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, வழக்கு தாக்கல் செய்வார் என்றால் புகார் கொடுத்துள்ளார். வழக்கு கிடையாது. 1ம் பிரதிவாதி நாராயணன் என் அம்மா பிறந்த ஊரில் டீ கடை ஹோட்டல் வைத்திருந்தார் என்றால் சரிதான். என் அப்பா அந்த கடையில் தான் சாப்பிடுவார் என்றால் வட்டிக்கு பதிலாக அங்கு சாப்பிடுவார். என் அப்பா பெண் எடுத்த ஊர் என்பதால் அந்த ஊரிலும் கிரைய ஒப்பந்தம் போட்டு கொடுக்கல், வாங்கல் செய்துள்ளார் என்றால் நாராயணனுக்கு மட்டும் தான் கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார். என் அப்பா ரேசன் கார்டு, சைக்கிள் ஆகியவற்றை வாங்கி கொண்டு பணம் கொடுப்பார் என்றால் ரேசன் கார்டு நகலையும் வாங்கி கொண்டு பணம் கொடுப்பார். என் அப்பா நல்ல உடல்நிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஒப்பந்தத்தில் ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை என்றால் சொத்தை எழுதி தர வேண்டும் என்ற எந்த வாசகமும் இல்லை என்றால்

சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் முடித்து தர வேண்டும் என்று என் அப்பா கேட்டார் என்பதற்கான எந்தவித எழுத்து பூர்வமான ஆவணமும் இல்லை என்றால் 1ம் பிரதிவாதி பணம் தருவார் என இருந்தேன். அவர் பணம் தரவில்லை. என் அப்பா இறந்த காலத்தில் 1ம் பிரதிவாதி எவ்வளவு பணம் தர வேண்டும் என எழுதி வைத்திருந்தார் என்றால் ரூ.2,25,000/–ம் தர வேண்டும் என எழுதி வைத்திருந்தார். என் அப்பா இறந்தபிறகு வழக்கு சொத்தை கிரையம் முடித்து தர வேண்டும் என 1ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நானோ, என் அப்பாவோ கிரையம் முடிக்க தயாராக இல்லாத நிலையில் சொத்தை பொறுத்து ஜார்ஜ் இருப்பதாக சொல்லமுடியாது என்றால் சரியல்ல. குறித்த காலத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை கிரையம் முடிக்க தயாராக இல்லாதநிலையில் கடன் கொடுத்து இந்தியவாரிசுரிமை சட்டம் 214(1ஏ)ன்படி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கும், என் அப்பாவிற்ககும் 1ம் பிரதிவாதிக்கும் விற்பவர், வாங்குவர் என்ற உறவுமுறை கிடையாது என்றாலும், கிரைய ஒப்பந்தம் கடனுக்காக வேண்டி எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 ஆவணம் கடனுக்காக எழுதப்பட்டது என்ற காரணத்தினால் நான் சொத்தை பொறுத்து ஜார்ஜ் எடுத்து கொண்டதாக சொல்வதும், காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்வதும் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என் வழக்கு காலவரையறை சட்டப்படி தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. காசிராஜன், உச்சிமாகாளி, சுந்தரபாண்டியன் ஆகியோர்கள் என்னுடன் பெட்ரோல் பல்கில் வேலை செய்து

வருகிறார்கள் என்றால் காசிராஜன், சுந்தரபாண்டியனும் வேலை செய்து வருகிறார்கள். நான் 2ம் பிரதிவாதியுடன் உறவில் இருந்து கொண்டு 2ம் பிரதிவாதியை கட்சி சேர்த்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கது என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)K.சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.